கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 02.12.2024

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வழங்கும் மாநில அளவிலான தேனீவளர்ப்பு குறித்த இருநாள் கருத்தரங்கு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், தேசிய தேனீ வாரியம் சார்பாக மாநில அளவிலான தேனீவளர்ப்பு இருநாள் பயிற்சி **டிசம்பர் மாதம் 05.12.2024 (வியாழக்கிழமை) மற்றும் 06.12.2024 (வெள்ளிக்கிழமை)** அன்று அண்ணா அரங்கம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

அன்று அளிக்கப்படும் கருத்தரங்கின் முக்கிய அம்சங்கள்

- தேனீ இனங்ளை கண்டுபிடித்து வளர்த்தல்
- பெட்டிகளில் தேனீ வளர்க்கும் முறை மற்றும் நிர்வாகம்
- தேனீக்கு உணவு தரும் பயிர்கள் மற்றும் மகரந்த சேர்க்கை மூலம் மகசூல் அதிகரிக்கும் பயிர்களின் விவரம்
- தேனைப் பிரித்தெடுத்தல்
- தேனீக்களின் இயற்கை எதிரிகள் மற்றும் நோய் நிர்வாகம்

பயிற்சியில் கலந்துகொள்ள விழைவோர், பயிற்சி நாள் அன்று **காலை 9.00 மணிக்கு அண்ணா அரங்கிற்கு (த.வே.ப.க., கோவை)** வந்து அடையாள சான்று சமர்ப்பித்து முன்பதிவு செய்துக்கொள்ளவும்.

**பயிற்சி நேரம்:** காலை 9.00 முதல் மாலை 5.00 மணிவரை.

பயிற்சியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு அணுகவேண்டிய முகவரி: பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண் பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர். தொலைபேசி: 0422–6611214, மின்னஞ்சல் entomology@tnau.ac.in

**மக்கள் தொடர்பு அலுவலர்**